வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 160 of 2014

வழக்கு சாட்சி - PW -5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியார் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | முத்தையா | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11.11.2025.

( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல்விசாரணை :** **நாள் : 11.11.2025.**

1) நான் தற்போது சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2009 ம் தேதி திருப்பூர் மாவட்டம் பல்லடம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் பொறுப்பில் இருக்கும் போது ஹரிந்தரன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பல்லடம் காவல்நிலைய குற்ற எண். 1442/2009 சட்டப்பிரிவு 409 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **வாதி கொடுத்த புகார் அ.த.சா.3 மற்றும் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.4 ஆகும்.** அசல் முதல் தகவல் அறிக்கைடன் **வாதியின் புகாரினை இணைத்து நீதிமன்ற நடுவருக்கு அனுப்பிவைத்தேன்.** புலன்விராரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வளார் திரு. ரமேஷ் குமார் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். புலன்விசாரணை அதிகாரி திரு. ரமேஷ் இறந்துவிட்டதால் அவருடன் பணியாற்றியதால் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சையம். அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ் குமார் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு அன்றறைய தினமே 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருண்குமார், அரங்கராஜ, ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் **அந்த மாதிரி வரைபடம் அ.தசா.5 ஆகும்.** பின்னர் சாட்சிகன் ஹரிசந்திரன், சுரேஷ், திருமலைசாமி, சங்கரன், சகாயமேரி, சுகன்யா, அருண்குமார், மற்றும் அரங்கராஜ ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் திரு. லேகநாதன் அவர்கள் மேல் விசாரணை மேற்கொண்டுள்ள அவர் இறந்துவிட்டதால் அவருடன் பணியாற்றியதால் அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சையம். அவருக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். காவல் ஆய்வாளர் திரு. லோகநாதன் இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரிகள் ரம்யா, கணேசன், தலைமறைவு எதிரிகளாக குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். புலன் விசாரணை முடித்து கடந்த 09.10.2010 ம் தேதி எதிரிகள் மீது சட்டபிரிவு 409 இதச பிரிவின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) ஐந்து நாட்களான புகார் கொடுத்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 50 அடி துாரத்தில் தான் சம்பவ இட கட்டிடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். கடந்த 01.11.2009 ல் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 4 நாட்கள் கால தாமதமாக அனுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லுவது தவறு என்றாலும் காலதாமதமாக அனுப்பட்ட முதல் தகவல் அறிக்கைக்கு காலதாமதம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் தாரர் வங்கி ஆவணமாக இவ்வழக்கில் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கண்காணிப்பு கேமராவில் பதிவுகள்

எதுவும் எடுத்து அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆபரணங்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றபட்டதாக வழக்கு ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். இறுதியறிக்கையில் சொல்லியபடி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடு படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேர இடத்தில் புகார் தாரரிடம் புகார் பெற்று வழக்கு பதியவில்லை என்றும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்தது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழகிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.11.11 17:52:42 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.